**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>**

**<u>அசல் வழக்கு எண்.112/2017</u>**

PW2 – திரு.சேவியர் நாள். 01.04.2024

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.S.துரைமுருகன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் கற்காத்தகுடியில் குடியிருந்து வருகிறேன். நீதிமன்றத்தின் அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ள தாவா சொத்து பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 371/47 ஆகும். மேற்படி சர்வே எண்ணின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 ஏர்ஸ் ஆகும். மேற்படி சர்வே எண் கொண்ட சொத்து யாரின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் வாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது.

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை